இன்றைய செய்தி நாளைய வரலாறு
முரசொலி
நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி
செவ்வாய்க்கிழமை 03.02.2026

# ஒன்றிய நிதிநிலை அறிக்கையில் ஒன்றும் இல்லை இல்லை இல்லை!

ஒன்றிய நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் தாக்கல் செய்த நிதி நிலை அறிக்கையில் திருக்குறளும் இல்லை. தமிழ்நாடும் இல்லை.

**தமிழ்நாட்டுக்கான எந்தத் திட்டமும் இல்லை. தமிழ்நாட்டுக்கான எந்த சிறப்புத் திட்டமும் இல்லை. மாநிலங்களுக்கான நிதி, பேரிடர் நிதி போன்ற எந்த ஒரு நிதிகளும் தமிழ்நாட்டிற்கு வழங்கப்படவில்லை.**

**தேர்தலுக்காகக் கூட எந்தத் திட்டத்தையும் அறிவிக்கவும் இல்லை. தமிழ்நாட்டுக்கான ஒன்றிய அரசின் திட்டங்களுக்கான நிதி கூட அறிவிக்கவில்லை. பல ஆண்டுகளுக்கு முன்பு அறிவிக்கப்பட்ட மதுரை எய்ம்ஸ் எப்போது கட்டி முடிக்கப்படும் என்ற அறிவிப்பும் இல்லை.**

தமிழ்நாட்டிற்கான வரிப்பகிர்வு 4.097 விழுக்காடு என்ற மிகச்சொற்ப அளவில் இருந்து கூடவும் இல்லை.

ஜல்ஜீவன் குடிநீர்த் திட்டத்தில் தமிழ்நாடு கோரியிருந்த 3,112 கோடி ரூபாய் ஒன்றிய அரசால் வழங்கப்படவில்லை. அனைவருக்கும் கல்வி திட்டத்துக்காக தமிழ்நாட்டுக்குத் தர வேண்டிய 3,548 கோடி ரூபாய் விடுவிக்கப்படவில்லை.

பிரதம மந்திரி கதிசக்தி பொருளாதார ரயில் மண்டலங்கள் என்பதில் ஒன்று கூட தமிழ்நாட்டுக்கு இல்லை.

இரயில்வே காரிடார் மேம்பாட்டில், 'சென்னை - ஐதராபாத்' மற்றும் 'சென்னை - பெங்களூரு' என்று இருக்கிறதே தவிர தமிழ்நாட்டுக்குள் எந்த இரயில்வே திட்டமும் இல்லை. தமிழ்நாட்டில் இருந்து மற்ற மாநிலத்துக்குள் தானே தவிர, **தமிழ்நாட்டுக்குள் இல்லை. கோவைக்கு மெட்ரோ ரயில் இல்லை. மதுரைக்கு மெட்ரோ ரயில் இல்லை. திருச்சிக்கு மெட்ரோ ரயில் இல்லை. ஓசூருக்கு விமான நிலையம் இல்லை. திருப்பூர், கோவை, கரூர், ஈரோடு உள்ளிட்ட மாவட்டங்களின் ஜவுளித் தொழில் துறையினருக்கு நிதிநிலை அறிக்கை ஊக்கமளிக்கவில்லை.**

மொத்த வரி வருவாயில் மாநிலங்களுக்குப் பகிர்ந்தளிக்கப்படும் பங்கு 41 விழுக்காட்டில் இருந்து 50 விழுக்காடாக உயர்த்தப்பட வேண்டும் என்பதை ஏற்கவும் இல்லை. தமிழ்நாடு உள்ளிட்ட பல்வேறு மாநிலங்களின் கோரிக்கையை மதிக்கவும் இல்லை.

ஏழைகளுக்கு இல்லை. பெண்களுக்கு இல்லை. விவசாயிகளுக்கு இல்லை. விளிம்பு நிலை மக்களுக்கு இல்லை. எந்தப் பிரிவினருக்கும் எந்த நன்மையும் இல்லை. வேலை வாய்ப்புக்கு எந்தத் திட்டமும் இல்லை. தனிநபர் வருமான வரியில் எந்தச் சலுகையும் இல்லை.

**வரலாறு காணாத அளவுக்கு ரூபாயின் மதிப்பு வீழ்ச்சி அடைந்திருப்பதை அதிகரிக்கத் திட்டமும் இல்லை.**

அமெரிக்க வரி விதிப்பு பயங்கரவாதத்தை எப்படி எதிர்கொள்ளப் போகிறோம் என்ற அறிவிப்பும் இல்லை. சரிந்து வரும் பங்குச் சந்தையை மீட்டெடுக்கும் திட்டமில்லை. பங்குச் சந்தையில் முதலீடு செய்த அன்னிய முதலீட்டாளர்கள் வெளியேறி ஓடும் நிலையை தடுக்க முயற்சிக்கவும் இல்லை. ஏற்றுமதி தொழிலைப் பாதுகாக்கக் கூடிய வகையில் எந்த ஒரு அறிவிப்பும் இல்லை.

பெட்ரோல் விலை பற்றிய கவலைகள் இல்லை. டீசல் விலை பற்றி கவலைகள் இல்லை. சிலிண்டர் விலையைப் பற்றி கவலைகள் இல்லை. தங்கம் விலை ஏற்றம் பற்றிய அக்கறை இல்லை. வெள்ளி விலை பற்றிய அக்கறை இல்லை.

முந்தைய நாள் வெளியான பொருளாதார ஆய்வறிக்கையை இவர்கள் படிக்கவுமில்லை. ஆய்வறிக்கையில் மிகச்சிறந்த மாநிலங்கள் என்று பாராட்டப்பட்ட மாநிலங்களுக்கு எந்தத் திட்டங்களும் இல்லை. பொருளாதார ஆய்வறிக்கையில் பிரச்சினைகள் என்று சொல்லப்பட்டவைகளை நிவர்த்தி செய்யும் முயற்சிகளும் இல்லை. இந்தியாவின் உண்மையான பிரச்சினைகளைக் கண்டுகொள்ளவில்லை.

இந்தியாவின் பொதுத்துறை நிறுவனங்களை வலுப்படுத்தக் கூடிய எந்தத் திட்டங்களும் இல்லை. விவசாய விளை பொருட்களுக்கு குறைந்தபட்ச ஆதார விலை நிர்ணயம் செய்யும் சட்டபூர்வ நிர்வாக ஏற்பாடு உருவாக்கப்படவில்லை. பண வீக்கத்தை கணக்கிட்டுப் பார்த்தால் ஒன்றிய அரசு 7 விழுக்காடு இந்தியா வளர்ச்சி அடைந்து கொண்டிருக்கிறது என்ற புள்ளி விவரம் நம்பக் கூடியதாக இல்லை. 'இந்தியாவில் தயாரிப்போம்' என்ற திட்டம் என்ன ஆனது என்பதே தெரியவில்லை.

வருமான வரியில் சலுகைகள் அறிவிக்கப்படவில்லை. வருமான வரி விகிதங்களில் எந்த மாற்றங்களும் இல்லை. நதிநீர் இணைப்புத் திட்டங்கள் இல்லை. வேளாண் சார்ந்த வளர்ச்சித் திட்டங்கள் இல்லை.

**11 ஆண்டு கால ஆட்சியில் என்ன சாதித்தோம் என்பது இல்லை. இனி என்ன சாதிக்கப் போகிறோம் என்பதும் இல்லை.**

பிரதமர் மோடியை நோக்கி முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சில கேள்விகளைக் கேட்டார்கள்.

**"தமிழ்நாட்டுக்குத் தரவேண்டிய 3,458 கோடி ரூபாய் கல்வி நிதி எப்போது வரும்? உங்கள் அரசிடம் இருந்து தமிழுக்குரிய நிதி ஒதுக்கீடு எப்போது வரும்? மாநிலங்கள் மீது நிதிச் சுமையை ஏற்றி ஊரக மக்களின் வாழ்வாதாரத்தை ஒழித்துக் கட்டும் புதிய திட்டம் எப்போது கைவிடப்படும்? பத்தாண்டுகளாக 'இன்ச் இன்ச்'சாக ஒன்றிய பா.ஜ.க. அரசு இழைத்து வரும் மதுரை எய்ம்ஸ் மருத்துவமனை என்ற எட்டாவது உலக அதிசயம் எப்போது எங்கள் கண்முன் வரும்? இயற்கைப் பேரிடர்களுக்காக நாங்கள் கேட்ட நிவாரணத் தொகை எப்போதுதான் வரும்?"** என்று கேள்வி எழுப்பினார் முதலமைச்சர். இவை எதற்கும் நிதிநிலை அறிக்கையில் பதில் இல்லை.

இப்படி மொத்தமும் இல்லை... இல்லை... இல்லை!!!

நிர்மலா சீதாராமன் திருக்குறளைச் சொல்லாவிட்டாலும் நமக்கு ஒரு குறள் நினைவுக்கு வருகிறது...

**நாடொறும் நாடி முறைசெய்யா மன்னவன்**
**நாடொறும் நாடு கெடும்.**

(ஆட்சியினால் விளையும் நன்மை தீமைகளை நாள்தோறும் ஆராய்ந்து அதற்குத் தக்கவாறு நடந்து கொள்ளாத அரசு அமைத்த நாடு சீர்குலைந்து போய்விடும்)




முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (2.2.2026) செங்கல்பட்டு மாவட்டம் சிறுசேரி சிப்காட் தொழில் நுட்ப பூங்கா வளாகத்தில் உள்ள நாவலூர் ஏரி 30 கோடி ரூபாய் செலவில் தூர்வாரப்பட்டு, கரைகள் பலப்படுத்தப்பட்டு, புனரமைத்து அமைக்கப்பட்டுள்ள சிப்காட் சுற்றுச்சூழல் பூங்காவினை திறந்து வைத்தார். இந்நிகழ்ச்சியில், குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா. மோ. அன்பரசன், தலைமைச் செயலாளர் நா. முருகானந்தம், தொழில், முதலீட்டு ஊக்குவிப்புமற்றும் வர்த்தகத் துறை செயலாளர் வி. அருண் ராய், தமிழ்நாடு தொழில் முன்னேற்ற நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் மரு.கி. செந்தில்ராஜ், செங்கல்பட்டு மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி. தி. சினேகா, சிறுசேரி தகவல் தொழில்நுட்ப பிரிதிநிதிகள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### பெண்ணையாறு நதிநீர்ப் பிரச்சினையில் உச்சநீதிமன்றம் அளித்த தீர்ப்பின்படி –

# ஒன்றிய அரசு உடனடியாக நடுவர் மன்றம் அமைக்க வேண்டும்!

## நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன் அறிக்கை!

**சென்னை, பிப்.3-**

**பெண்ணையாறு நதிநீர்ப் பிரச்சனைக்குத் தீர்வு காண உச்சநீதிமன்றம் ஒரு நடுவர் மன்றம் அமைக்க அளித்த தீர்ப்பின்படி ஒன்றிய அரசு நடுவர் மன்றம் விரைந்து அமைக்க வேண்டும் என எதிர்பார்க்கிறோம் என நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன் அவர்கள் அறிக்கை விடுத்துள்ளார்.**



அவரது அறிக்கை வருமாறு :-

பெண்ணையாறு மற்றும் அதன் கிளை நதியான மார்கண்டேயா நதி 1892-ஆம் ஆண்டைய மதராஸ்-மைசூர் ஒப்பந்தத்திற்கு உட்பட்ட நதி என்பதால், கர்நாடக அரசு அதன் குறுக்கே கட்டுமானங்களை மேற்கொள்ள தமிழ்நாட்டின் இசைவைப் பெற வேண்டும். ஆனால் தன்னிச்சையாக கர்நாடக அரசு மார்கண்டேயா நதியின் குறுக்கே எர்கோல் கிராமத்தில், பங்காரப்பேட்டை தாலுக்காவில் ஒரு அணையையும் மற்றும் பெண்ணையாற்றிலிருந்து சில நீரேற்றும் திட்டங்களை செயல்படுத்துவதைத் தடுக்க ஆணையிடுமாறு உச்சநீதிமன்றத்தில் 18.05.2018 -அன்று தமிழ்நாடு அரசு அசல் வழக்கை (OS 1 of 2018) தாக்கல் செய்தது. இதில் உச்சநீதிமன்றம் 14.11.2019 அன்று நடுவர் மன்றம் அமைக்க ஒன்றிய அரசிற்கு ஆணையிட்டது.

ஆனால், ஒன்றிய அரசின் ஜல்சக்தி அமைச்சகம், ஓர் ஒப்பந்தப் பேச்சுவார்த்தைக் குழுவை (Negotiation Committee) ஜனவரி, 2020-இல் அமைத்தது. இக்குழு 31.07.2020 அன்று தனது இறுதி அறிக்கையில், நடுவர் மன்றத்தை ஜல்சக்தி அமைச்சகம் அமைக்கலாம் என பரிந்துரைத்தது. ஆனால் ஒன்றிய அரசு நடுவர் மன்றம் அமைப்பதை தாமதித்து வந்தது. இச்சூழ்நிலையில் இந்த அரசு பதவி ஏற்றவுடன் முதலமைச்சர் அவர்களின் ஆலோசனைப்படி நான் ஒன்றிய அரசின் நீர்வளத்துறை அமைச்சர் அவர்களை 06.07.2021 இல் நேரில் சந்தித்து இப்பிரச்சனைக்கு விரைவில் தீர்வு காண நடுவர் மன்றம் அமைக்க கேட்டுக் கொண்டேன்.

இதன் தொடர்ச்சியாக ஒன்றிய அரசிற்கு கடிதங்கள் வாயிலாகவும் நடுவர் மன்றம் அமைக்க கேட்டுக்கொள்ளப்பட்டது. மேலும், உச்ச நீதிமன்றத்தில் மனுக்களும் தாக்கல் செய்யப்பட்டன.

ஆனால், ஒன்றிய அரசு, நடுவர் மன்றம் அமைப்பதை எந்த முகாந்திரமும் இல்லாமல் தாமதப்படுத்தியதல்லாமல் உச்ச நீதிமன்றத்தில் மீண்டும் ஒரு பேச்சுவார்த்தை குழு அமைக்க கேட்டுக்கொண்டது. உச்சநீதிமன்றத்தின் 23.01.2024 தேதியிட்ட ஆணையின்படி 2வது பேச்சுவார்த்தைக் குழுவை, ஜல்சக்தி அமைச்சகம் 07.02.2024 அன்று அமைத்தது. இச்சூழலில் மீண்டும் ஒன்றிய அரசின் நீர்வளத்துறை அமைச்சர் அவர்களை 25.07.2024 அன்று நேரில் சந்தித்து நடுவர் மன்றம் அமைக்கும் கோரிக்கையை வலியுறுத்தினேன்.

2வது பேச்சுவார்த்தைக் குழு, பேச்சுவார்த்தை வெற்றி பெறவில்லை என்பதை தனது இறுதி அறிக்கையில் 30.09.2024 அன்று ஜல்சக்தி அமைச்சகத்தின் பரிசீலனைக்காக சமர்ப்பித்துள்ளது.

ஒன்றிய அரசு நடுவர் மன்றம் அமைப்பதை மேலும் தாமதித்து வந்ததால் 08.09.2025 அன்று உச்ச நீதிமன்றத்தில் அசல் வழக்கினை விரைவில் விசாரிக்க கோரப்பட்டது.

இதனைத்தொடர்ந்து, உச்ச நீதிமன்றம் 02.02.2026 தேதியிட்ட தீர்ப்பில், பெண்ணையாறு பிரச்சனையை தீர்ப்பதற்காக, ஒருமாத காலத்திற்குள் ஒரு நடுவர் மன்றம் அமைக்க ஒன்றிய அரசிற்கு உத்தரவிட்டுள்ளது.

பெண்ணையாறு மற்றும் அதன் கிளை நதியான மார்கண்டேயா நதி குறித்த பிரச்சனைகளை தீர்க்க தமிழ்நாடு அரசு தொடர்ந்து பல முயற்சிகள் எடுத்து வந்துள்ளதன் விளைவாக உச்சநீதி மன்றத்தில் 02.02.2026 தேதியிட்ட நல்ல தீர்ப்பு பெறப்பட்டுள்ளது. உச்ச நீதிமன்றத்தின் தீர்ப்பை ஒன்றிய அரசு நிறைவேற்றுமென தமிழ் நாட்டு மக்கள் எதிர்பார்க்கிறார்கள். தமிழ் நாட்டு மக்களின் எதிர்பார்ப்பினை பூர்த்தி செய்யும் வகையில் ஒன்றிய அரசு நடுவர் மன்றத்தை உடனடியாக அமைக்குமென எதிர்பார்க்கிறேன்.

மேலும், இப்பிரச்சனை குறித்து தமிழ்நாடு அரசு தொடர்ந்து அனைத்து தேவையான நடவடிக்கைகளையும் எடுத்து விரைவில் பெண்ணையாறு மற்றும் மார்க்கண்டேயா நதிநீரை பெற்று, குடிநீர் மற்றும் வேளாண்மை தேவைகளுக்காக நம்பியுள்ள மக்களின் நலன்களை பாதுகாக்கும்.

இவ்வாறு அமைச்சர் துரைமுருகன் அவர்கள், தனது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

### இ. கருணாநிதி எம்.எல்.ஏ தலைமை! பல்லாவரம் சட்டமன்றத் தொகுதியில்

# 'தமிழ்நாடு தலை குனியாது' தேர்தல் பரப்புரை மாபெரும் பொதுக்கூட்டம்!

## டாக்டர் எழிலன் நாகநாதன் எம்.எல்.ஏ – டி.ஆர்.பாலு எம்.பி – அமைச்சர் தா.மோ. அன்பரசன் சிறப்புரை!

*பல்லாவரம், பிப்3-*

*காஞ்சிபுரம் வடக்கு மாவட்டம் பல்லாவரம் சட்டமன்றத் தொகுதியில் முதலமைச்சர் கழக தலைவர் அவர்களின் ஆணையின்படி பிப்ரவரி 1ஆம் தேதி முதல் 234 தொகுதிகளிலும் மாபெரும் பிரச்சாரம் பொதுக் கூட்டங்கள் நடத்துவது என்ற அறிவிப்பின்படி பல்லாவரம் சட்டமன்றத் தொகுதியில் இன்று 3-2-2026 செவ்வாய்க்கிழமை மாலை 5 மணி அளவில் பல்லாவரம் பேருந்து நிலையம் அருகில் பல்லாவரம் சட்டமன்றத் தொகுதி சார்பில் தமிழ்நாடு தலைகுனியாது திராவிட மாடல் நல்லாட்சியின் 5 ஆண்டு சாதனைகள் விளக்க தேர்தல் பரப்புரை மாபெரும் பொதுக்கூட்டம் மாவட்ட கழகத் துணைச் செயலாளரும் பல்லாவரம் சட்டமன்ற உறுப்பினர் இ.கருணாநிதி தலைமையில் மண்டலம் குழு தலைவரும் பம்மல் தெற்கு பகுதி கழகச் செயலாளர் வே. கருணாநிதி வரவேற்பில் மண்டலத் தலைவர் வடக்கு பகுதி கழக செயலாளர் இ. ஜோசப் அண்ணாதுரை பம்மல் வடக்கு பகுதி செயலாளர் த. ஜெயக்குமார் தெற்கு பகுதி கழகச் செயலாளர் இ.எஸ். பெர்னார்ட் செம்பாக்கம் வடக்கு பகுதி கழகச் செயலாளர் ஏ. கே. கருணாகரன் புனித தோமையார் மலை ஒன்றிய கழகச் செயலாளர் ஜி. கே. விவேகானந்தன் என்கிற ரவி ஆகியோர் முன்னிலையில் நடைபெற உள்ள மாபெரும் பொதுக்கூட்டத்தில் ஆயிரம் விளக்கு சட்டமன்ற உறுப்பினரும் கழக மருத்துவ அணி செயலாளர் மாநில திட்டக்குழு உறுப்பினர் மருத்துவர் எழிலன் நாகநாதன் கழகப் பொருளாளர் நாடாளுமன்ற மக்களவை குழு தலைவர் டி.ஆர். பாலு காஞ்சி வடக்கு மாவட்ட கழக செயலாளர் சிறு குறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ. அன்பரசன் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்புரை ஆற்ற உள்ளார்கள்.*

*மேலும் கழக தீர்மான குழு செயலாளர் மீ.அ.வைத்தியலிங்கம் மாநகரச் செயலாளர் தாம்பரம் சட்டமன்ற உறுப்பினர் எஸ்.ஆர்.ராஜா தாம்பரம் மாநகராட்சி மேயர் க.வசந்தகுமாரி துணை மேயர் கோ. காமராஜ் பல்லாவரம் தொகுதி பார்வையாளர் ரபி அஹமத் தொமுச பொன்ராம் தகவல் தொழில்நுட்ப துணைச் செயலாளர்கள் அ. தமிழ்மாறன் என்.நவீன் மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் கோல்டு டீ. பிரகாஷ் பொதுக் குழு உறுப்பினர் மு.ரஞ்சன் மாநகரத் துணைச் செயலாளர் இரா. நரேஷ் கண்ணா எம். சி.மாவட்ட மாணவர் அணி அமைப்பாளர் பேராசிரியர் எல்.பிரபு மாவட்ட தகவல் தொழில்நுட்ப ஒருங்கிணைப்பாளர் வி. ரவிச்சந்திரன் மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் பம்மல் வீ. தினேஷ் மாநகர இளைஞரணி அமைப்பாளர் பி.கே.ஏ.சத்தியபிரபு மாவட்ட கழக பிரதிநிதிகள் க. ரமேஷ் த. ராஜாராமன் கே. தனசேகரன் பா. டெல்லி எஸ்.செல்வம் ஒன்றிய கழக நிர்வாகிகள் கே. செல்வராஜ் ஆர். ராஜா மாவட்ட கவுன்சிலர் ச. மனோகர் பொழிச்சலூர் ஊராட்சி மன்ற தலைவர் பா. வனஜா தயாளன் திரிசூலம் ஊராட்சி மன்ற தலைவர் உஷா மாரிமுத்து*

*பொழிச்சலூர் ஊராட்சி துணைத் தலைவர் வி. ஜோசப் திரிசூலம் ஊராட்சி மன்ற துணைத் தலைவர் அமுதா அந்தோணி ஒன்றிய கவுன்சிலர்கள் எஸ். சௌமியா சாய் செல்வக்கனி செல்வராஜ் மாநகர இளைஞரணி துணை அமைப்பாளர்கள் ச.பிரபு இன்சாமாம் நகர முன்னாள் இளைஞர் அணி அமைப்பாளர் வி. என். சிலம்பரசன் மாநகர மாணவரணி துணை அமைப்பாளர்கள் எம்.இளவரசன், ஏ.செந்தில்குமார் ஆர். ஜோஸ்பிரபு பா. வினோத்குமார் இரா. முரளிதரன் மாவட்ட தகவல் தொழில்நுட்ப துணை ஒருங்கிணைப்பாளர் டிபி ராஜலிங்கம் சென்னை மாநகராட்சி 159 ஆவது வார்டு ஜெயா செல்வம் ப.கிருஷ்ணமூர்த்தி அமுதப்பிரியா எம். சி. மற்றும் பகுதி கழக நிர்வாகிகள் மாமன்ற உறுப்பினர்கள் வட்ட கழகச் செயலாளர்கள் பகுதி அணிகளின் அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பிக்க உள்ளார்கள்.*

*மாவட்டக் கழக இளைஞரணி துணை அமைப்பாளர் கோ. ஜானகிராமன் நன்றி உரை ஆற்றுகிறார்.*



மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் நேற்று (02.02.2026) சென்னை–சைதை–கிண்டி, கலைஞர் நூற்றாண்டு உயர்சிறப்பு மருத்துவமனையில், திருவாரூர் அரசு மருத்துவக்கல்லூரி மாணவி சின்பனிஸ்ரீ (வயது 21) என்பவருக்கு அதிநவீன நரம்பியல் சிகிச்சை வழங்கப்பட்டு உயிர் காப்பாற்றப்பட்டுள்ளதை தொடர்ந்து மருத்துவப் பயனாளியை நேரில் சந்தித்து நலம் விசாரித்தார். இந்நிகழ்வில் கலைஞர் நூற்றாண்டு உயர்சிறப்பு மருத்துவமனை இயக்குநர் மரு.பார்த்தசாரதி, நரம்பியல் அறுவை சிகிச்சை நிபுணர் மரு.சுரேஷ்பாபு, ஊடுருவல் கதிரியக்க நிபுணர் மரு.பெரியகருப்பன், மயக்க மருந்து நிபுணர் மரு.கார்த்திகேயன், நோடல் அலுவலர் மரு.ரமேஷ் மற்றும் மருத்துவக் குழுவைச் சார்ந்த மருத்துவர்கள், செவிலியர்கள் ஆகியோர் உடனிருந்தனர்.